# சைவத் தமிழ்ச் சங்கம்
# அருள்மிகு சிவன் கோவில்

www.sivankovil.ch, www.sivantv.com

## 9 வயதுப் பிரிவு

### தேவார மனனப்போட்டி

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நான்அறியேன்
ஏற்றாய்அடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

### திருவாசக திருமந்திர மனனப்போட்டி - 9 வயதுப் பிரிவு

நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான்நடுவே

வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்எம் உடையானே.

உற்றாரை யான்வேண்டேன்
    ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்
    கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங்
    கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
    கசிந்துருக வேண்டுவனே.

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.

- திருக்குறள் முதலாம் அதிகாரம்

- பேச்சுப்போட்டி "நவராத்திரி" சுயதேடல்.
  (4 - 5 நிமிடம்)

அன்பார்ந்த பெற்றோர்களே!
உங்கள் பிள்ளைகளை இப்போட்டிகளில் பங்குகொள்ள வைப்பதன் மூலம் பிள்ளையின் தமிழறிவு, சமயஅறிவு, பண்பாடு, தமிழ் சமூகத்துடனான தொடர்பு என்பன வளர்ச்சியடையும். எனவே பரிசில்களை விட பங்குபற்றும் திறமையும், ஆர்வமும் மேலானது.